Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

33 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 33 பாலம்: 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் September 01, 2023

## நிலாவின் தென்துருவத்தில் விண்கலத்தை நிறுத்திய முதல் நாடு!

நிலாவிற்கு விண்கலத்தை அனுப்பிய நாடுகளாக ரஷியா, அமெரிக்கா, சீனா இருந்து வந்தன. இந்த வரிசையில் புதிதாக 4 வது நாடாக இந்தியா இணைந்துள்ளது. இஸ்ரேல் 2019 ஆம் ஆண்டு விண்கலத்தை நிலாவை நோக்கி அனுப்பியது ஆனால் நிலாவில் தரையிறங்கும்போது அதன் இயந்திரம் பழுதடைந்து மேற்பரப்பில் வேகமாக மோதிச் சிதறியது. ஜப்பான் ஒகஸ்ட் 25, 2023 இல் விண்கலம் ஒன்றை நிலாவை நோக்கி அனுப்ப இருந்தது.

கடந்த 2008 ஆம் ஆண்டு சந்திரயான் 1 விண்கலத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் நிலாவிற்கு அனுப்பினார்கள். ஆனால், அது வெற்றிபெறவில்லை. 2 வது முறையாக கடந்த 2019 ஆம் ஆண்டு சந்திரயான் 2 விண்கலத்தை நிலாவை நோக்கி இஸ்ரோ அனுப்பியது. ஆனால் ரோவர் கருவி நிலாவில் தரையிறங்கும் போது அதன் மேற்பரப்பில் வேகமாக மோதி வெடித்துச் சிதறியது.

அதன் தொடர்ச்சியாக இஸ்ரோ ஷரூ.615 கோடியில் (அண்ணளவாக CAN$100 மில்லியன்) நிலாவின் இருண்ட பகுதியை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 என்ற விண்கலத்தை வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 எம்-4 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து ஜூலை 14ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. பூமியின் நீள் வட்டப் பாதையில் 5 முறை சுற்றி வந்தது. அதன் பின் நிலாவின் ஆர்ப்பிட்டுக்குள் நுழைந்த சந்திரயான் 3, பல நாட்கள் நீள் வட்டப்பாதையில் சுற்றியது.

பூமியின் சுற்று வட்டப்பாதை மற்றும் நிலாவின் சுற்று வட்டப்பாதையை கடந்து 40 நாட்கள் பயணத்திற்கு பிறகு சந்திரயான் 3 விண்கலம் ஒகஸ்ட் 23, 2023 இல் வெற்றிகரமாக நிலாவின் தென் துருவத்தில் தரையிறங்கியது.

விண்கலம் தரையிறங்கும்போது 800 மீட்டர் என்ற உயரத்தை எட்டும் வரை விக்ரம் விக்ரம் லேண்டர் (தரையிறங்கிக் கலன்) எதிர்பார்த்த அனைத்து அளவுகளுக்கு உள்ளே தான் இருந்துள்ளது என்கிறார் விஞ்ஞான் பிரசார் அமைப்பின் முதுநிலை விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன்.

அதன் செயல்பாடுகள் திட்டமிட்டபடி இருந்ததோடு, பெரிய மாற்றங்கள் இருக்கவில்லை என்று கூறும் அவர், ஆனால் 150 மீட்டர் உயரத்திற்குச் சென்றபோதுதான் அது தரையிறங்குவதாக இருந்த இடத்தின் தரைப்பகுதியில் இடர் இருப்பதை உணர்ந்துள்ளது என்று விளக்கினார்.



அதை உடனடியாக உணர்ந்த விக்ரம் லேண்டர், அந்த நேரத்தில் மாற்று இடத்தில் தரையிறங்குவதற்காக பக்க வாட்டில் நகர்ந்தது.

“இது சாதாரணமாக நேரலையில் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இது மிகவும் கூர்மையான, நுட்பமான இடர். இறுதி வரை கச்சிதமாக வந்த விக்ரம் லேண்டர், தடம் பதிக்கப் போகும் நேரத்தில் அந்த இடத்தில் இடர் இருப்பதைக் கண்டறிந்தது. அந்தத் தருணம் ஒரு படபடப்பை ஏற்படுத்திவிட்டது,” என்கிறார் முதுநிலை விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன்.

தரையிறங்கும் செயல்முறை தொடங்கிய “18வது நிமிடத்தில் இந்த மாற்றங்கள் நிகழ்ந்து பிறகு அதைச் சரிசெய்து விக்ரம் லேண்டர் தரையிறங்கியுள்ளது.”

இந்த மாற்றங்கள் காரணமாக திட்டமிட்ட கால அளவில் 30 விநாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்டது. இந்த மாற்றத்தை பெங்களூருவில் இருக்கும் இஸ்ரோ தொலைத்தொடர்பு மையத்தில் இருந்து கண்ட விஞ்ஞானிகளின் முகத்தில் பட படப்பு தென்பட்டது என்று கூறும் த.வி. வெங்கடேஸ்வரன், இறுதியில் அதைச் சரிசெய்து லேண்டர் தரை யிறங்கியதும் நிம்மதியடைந்தனர் என்கிறார்.

பிறகு தரையிறங்கும் வேகத்தை எதிர் பார்த்த வகையில் சரிசெய்து கச்சிதமான வேகத்தில் தரையைத் தொட்டது. அதே போல், “தரையிறங்குவதற்கான சென்சார் கருவிகள், வழிகாட்டும் கருவிகள், வேகத்தை அளக்கும் கருவிகள், சேதங்களைக் கண்டறியும் கருவிகள் என அனைத்தும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன என்பது இதன் மூலம் தெரிய வருகிறது,” என்று தெரிவித்தார்.

விக்ரம் லேண்டர் நிலாவைத் தொட்ட உடன் சந்திரயான் 3 விண்கலம் இஸ்ரோவுக்கு ”இந்தியா, நான் எனது இலக்கை எட்டிவிட்டேன். நீங்களும்தான்” என ஒரு செய்தியை அனுப்பியதாக இஸ்ரோ ட்விட்டரில் பதிவிட்டு உள்ளது. இந்த நிலையில் இஸ்ரோவுக்கு விக்ரம் லேண்டர் நிலாவின் மேற்பகுதியில் இருந்து எடுத்த புகைப்படங்களையும் அனுப்பி இருக்கிறது. அந்த 4 புகைப்படங்களையும் ட்விட்டரில் இஸ்ரோ பகிர்ந்து உள்ளது. ”விக்ரம் லேண்டர் - பெங்களூரு இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தின் இணைப்பு வெற்றிகரமாக நடந்துள்ளது.” என்று ட்விட்டரில் இஸ்ரோ பதிவிட்டு உள்ளது. இந்த நிலையில் விக்ரம் லேண்டர் தரையிறங்கியதால் எழும்பிய புழுதி அடங்கியதைத் தொடர்ந்து பிரக்யான் ரோவர் அதில் இருந்து நிதானமாக வெளிவந்தது. ஊர்திக்கலமான பிரக்யான் ரோவர், அதன் தாய்க்கலமான விக்ரம் லேண்டரில் இருந்து வெளியே வந்து விட்டதை உறுதி செய்யும் வகையில் தாயும் சேயும் ஒன்றையொன்று படமெடுத்து அனுப்பின.

நிலாவின் தரையில் இறங்கிவிட்ட இந்த 26 கிலோ எடை கொண்ட ரோவர் நிலாவின் தரைப்பரப்பில் விநாடிக்கு ஒரு செ.மீ என்ற வேகத்தில் நகரும். அப்படி நகரும் நேரத்தில் அது அங்குள்ள பொருட்களை ஸ்கேன் செய்துகொண்டே நகரும்.

மேலும், நிலாவின் காலநிலை குறித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தரவுகளை அனுப்பும். அதுமட்டுமின்றி, நிலாவின்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUYING / SELLING HOME
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorba
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Co
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# வன்முறையைத் தூண்டும் பேச்சுக்கள்!

**- விகிர்தன் -**

நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையே பெரும் மோதல்கள் ஏற்பட்டு கலவரம் ஏற்படலாம் எனவும், வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறலாம் என்றும் சர்வதேச மற்றும், உள்நாட்டு ஊடகங்களிலும் வெளியாகும் புலனாய்வுத் தகவல்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இன, மதக் கலவரங்கள் ஏற்படலாம் என்றும், ஐ.எஸ் அமைப்பின் அச்சுறுத்தல்கள் நாட்டிற்கு ஏற்பட்டு உள்ளதாகவும் புலனாய்வு அமைப்புகள் வெளியிட்டுள்ள எச்சரிக்கைகள் தொடர்பில் உடனடியாக சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். கடந்த 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகங்களில் பல்வேறு புலனாய்வு அமைப்புகள் தகவல்களை வெளியிட்டுள்ளதாகவும், இது மிகவும் அச்சம் தரும் விடயம் மட்டுமன்றி இது தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பான விடயம் என்றும் சஜித் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் இதனைக் குறிப்பிட்டாரா? அரசாங்கத்தை இது பற்றி விளக்கமளிக்கும் வகையில் தூண்டுவதற்காக கூறினாரா? என்று பார்த்தால் உண்மையில் நாட்டில் இன, மத வெறுப்புணர்வை தூண்டும் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றன என்றுதான் கூற வேண்டும்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் மோசமான இனவாத, வனமுறையைத் தூண்டும் விதமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

'வடக்கிற்கு செல்வேன். விகாரைகள் மீதும் பிக்குகள் மீதும் கைவைத்தால், கை வைப்பவர்களது தலையை எடுத்து களனிக்கு கொண்டு வருவேன்" என களனியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்தார்.

அவரது இந்தப் பேச்சுக் குறித்து தமிழர் தரப்பில் எதிர்ப்புகள் தெரிவித்த போதும், சிங்கள அரசியல்வாதிகள் இது குறித்து பெரிதாக எதிர்ப்புகளை வெளிக்காட்டவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரைப் பார்த்து "வாயை மூடு" என்று கூறியதாக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கொதிப்படைந்து கருத்துக்களை தெரிவித்ததைப் போல மேர்வின் சில்வாவின் கருத்திற்கு எதனையும் கூறவில்லை.



ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்துறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம், மேர்வின் சில்வாவின் கருத்திற்கு எதிராக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார். இனவாத கருத்துக்களை தூண்டி வன்முறையை ஏற்படுத்த மேர்வின் சில்வா முயல்வதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். எனினும், இதனால் ஆகப்போவது எதுவுமில்லை என்றுதான் கூற வேண்டும். "மேர்வின் சில்வாவிற்கு தலையில் சுகமில்லை" என்று மனோ கணேசன் பரிகாசம் செய்தாலும் கூட, கோமாளி போன்ற அவருக்கு களனியில் வாக்களிக்கும் ஆதரவாளர்கள் இருக்கின்றனர்.

அடுத்தது- நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதியை ஒரு மனநோயாளி என்று கூறியுள்ளார். அவர் நாடாளுமன்றில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ஒரு மனநோயாளி. இவ்வாறானவரால் எவ்வாறு சரியான முறையில் செயற்பட முடியும்? ஆகவே முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு பிறிதொரு நீதிபதியை நியமிக்க வேண்டும் என்பதை நீதியமைச்சிடம் வலியுறுத்துகிறேன். குருந்தூர்மலையில் கை வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கு எல்லையுண்டு. அதை கோழைத்தனம் என்று கருத வேண்டாம்" என அவர் தெரிவித்துள்ளார்.

முதலில் நீதிபதியை மனநோயாளி என்று கூறிவிட்டு அடுத்ததாக வன்முறையைத் தூண்டும் விதமான கருத்துக்களையும் அவர் பிரயோகித்துள்ளார். சரத் வீரசேகரவின் கருத்துக்கள் சற்று தீவிரமான தாகவே பார்க்கப்படுகின்றது. அவர் மேர்வின் சில்வாவைப் போன்ற கோமாளி மனிதர் அல்ல என்பதால் தமிழ் சட்டத்தரணிகள் சரத் வீரசேகரவின் கருத்திற்கு எதிராக போராட்டங்களையும் நடத்தி உள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் சரத் வீரசேகரவிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 83 ஆவது பிரிவிற்கு அமைய நீதிபதிகளையும், நீதிமன்ற நடவடிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது. ஆனால் சரத் வீரசேகர தனது உரையின் போது நீதிபதியின் பெயரை சுட்டிக்காட்டி அவரை விமர்சித்து உள்ளார் இவை பாரதூரமானது. நிலையியற்கட்டளை 83 ஐ அப்பட்டமாக மீறும் செயல் என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மற்றுமொரு இனவாதியான, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசம் தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பு சிங்களவர்களின் தலைநகரம் எனத் தெரிவித்துள்ளார். அவர் இப்படிக் கூறியதில் பிரச்சினை இல்லை. ஆனால், இலங்கை சிங்கள பௌத்த நாடு இந்த நாட்டில் எந்த இடத்தையும் தமிழர்களுக்குச் சொந்தம் என்று உரிமை கோர முடியாது எனக் கூறியிருப்பதுதான் பிரச்சினையானது.

சிங்கள- பௌத்த காவலர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் இந்த அரசியல் வாதிகள் அண்மைய நாட்களாக தெரிவித்து வரும் இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் தேர்தல்களில் சிங்கள மக்களின் வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்கானதே என சிங்கள மக்களில் சிலர் தெரிவிக்கின்றனர். ஆனால், அமெரிக்கா முதலான சர்வதேச நாடுகளும், ஐ.நாவும் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. குருந்தூர்மலை விவகாரத்தை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் அண்மையில் குறிப்பிட்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே, நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையே பெரும் மோதல்கள் ஏற்பட்டு கலவரம் ஏற்படலாம் என வெளிவரும் புலனாய்வுத் தகவல்களை புறக்கணிக்க முடியாது.




## நம்மை வழிகாட்டும் ஏழு விடயங்கள்

1) சிந்தித்து பேசவேண்டும்
2) உண்மையே பேசவேண்டும்
3) அன்பாகப் பேசவேண்டும்
4) மெதுவாக பேசவேண்டும்
5) சமயம் அறிந்து பேசவேண்டும்
6) இனிமையாகப் பேசவேண்டும்
7) பேசாதிருக்கப் பழக வேண்டும்



# தற்கொலையிலிருந்து எங்கள் பிள்ளைகளை பாதுகாப்போம்




தமிழ் பிரதேசங்களில் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக உயர்கல்வி பயிலும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பல்கலைக்கழகத்திற்கு சென்ற மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் பதிவாகி உள்ளன.

இது குறித்து மிக முக்கியமாக ஆராய வேண்டியுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு சென்ற பின்னரும், செல்வதற்கு முன்னரும் கூட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. இதற்கு காரணம் மனவுளைச்சல் என்று சொல்லப்படுகின்றது. இந்த மனவுளைச்சல்களுக்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை செவிமடுக்க வேண்டும். பிள்ளைகளின் விருப்பம், விருப்பமின்மை தொடர்பில் ஆராய்ந்து அவற்றிற்கு அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கு அழுத்தம் கொண்டுக்கக் கூடாது. பெற்றோரின் அழுத்தமும் பல்கலைக்கழகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைளும் சேர்ந்து அவர்களை மனவுளைச்சலின் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்கின்றது. அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் மனநிலைக்கு ஆளாகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியில் 22 வயது இளைஞன் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெருந்துயரத்தை ஏற்படுத்தியது. உயர்தரத்தில் கணிதப் பிரிவில் மாவட்டத்திலேயே சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொண்ட மாணவன் மொரட்டுவ பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யட்டிருந்த நிலையில் தற்கொலை செய்து கொண்டார்.

அந்த மாணவன் அடுத்த வருடம் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொள்ள விரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான காரணம் என்னவென்பது தெரியவில்லை.




பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். அதனால் பெற்றோரை குறைசொல்ல முடியாது. ஆனாலும் பிள்ளைகளின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை ஆராய வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னர். வவுனியாவிலும் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட இறுதி வருட மாணவனான இவர், நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார். உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் இவர் தாய் மண்ணில் இருதய சிகிச்சை நிபுணராக வர விரும்புவதாக ஊடகங்களுக்குப் பேட்டியளித்திருந்தார். இவர் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பதற்கான காரணம் தெரியவில்லை. மேலும் பல பல்கலைக் கழக மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றன.

இச்சம்பவங்களை செய்திகளாக மட்டும் பார்த்து விட்டு கடந்து செல்ல முடியாது. இதனை முடிந்தவரை தடுப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளும், புதிய மாணவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி மனவுளைச்சலை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கை பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்களுக்கு ஏற்படுத்தப்படும் சில நெருக்கடிகளும் இதற்கு காரணம் என சொல்லப்படுகின்றது. சில பெற்றோர் பிள்ளைகள் மீது மேற்கொள்ளும் அழுத்தங்களும் இதற்கு காரணம் எனக் கூறப்படுவதையும் முழுவதுமாக மறுப்பதற்கில்லை. விபரீதமான முடிவுகள் ஏற்பட்டதன் பின்னர் காரணங்களை ஆராய்வதை விட இதனை தடுப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆராய்வதே சிறந்தது.

அண்மையில் இது குறித்து கல்வியாளர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது, இவ்வாறு மனவுளைசலுக்கு உள்ளாகும் மாணவர்கள் தங்கள் பிரச்சினைகளை வெளிப்படையாக சொல்வதற்கு- பகிர்ந்துகொள்வதற்கு இடமொன்று அவசியம் என்று கூறினார். இதற்காக மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள், கல்வியாளர்கள், பல்கலைக்கழகத்தை நிறைவு செய்து தொழில் செய்பவர்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்த அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் இவ்வாறான அமைப்புகள் உருவாக்கப்பட்டு மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் உளவியல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகளை நடத்த வேண்டும். அதனூடாக தங்களின் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வதற்கு அந்த அமைப்பை நாடும் நம்பிக்கையை ஏற்படுத்தலாம் என்றும் குறிப்பிட்டார்.

புதிதாக பல்கலைக்கழகத்திற்கு செல்லும் மாணவர்களை அழைத்து அவர்களின் அச்சத்தைப் போக்கி, மனத்தடைகளை நீக்கவும் இவ்வாறான அமைப்பு பங்களிப்பு செய்யலாம். இதில் உளவியலாளர்களுக்கு அடுத்தபடியாக, பல்கலைக்கழங்களில் கற்று வெளியேறியவர்கள் தாங்கள் பல்கலைக்கழகத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளை எடுத்துக் கூறி, எவ்வாறு அவற்றையெல்லாம் கடந்து வெற்றிகொண்டோம் என்பதை விளக்குகின்ற போது புதிய மாணவர்களுக்கு அது ஒரு ஊக்கியாக அமையும். இதைப் பற்றி துறை சார்ந்தவர்கள், சமூகப் பொறுப்புமிக்கவர்கள் சிந்தித்து ஒரு அமைப்பை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

இதே வேளை- கொலை, கொள்ளை, வன்முறை, மோசடி தொடர்பான செய்திகளே தினசரி ஊடகங்களை ஆக்கிரமித்து வருகின்றன. நாடு முழுவதும் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. இதில் தமிழ் பிரதேசங்களிலும் மோசமான குற்றச் செயல்கள் பதிவாகி வருகின்றன.

பொதுமக்களை பலிகொள்ளும் சம்பவங்களில் வீதி விபத்துக்கள் முக்கியமானவை. வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்களுக்கு வாகனங்களின் சாரதிகளே பொறுப்பேற்க வேண்டும். போதைப் பொருள் பாவித்து விட்டு வாகனங்களை செலுத்துதல், பயணிகள் பஸ்களின் போட்டித் தன்மை, கவனயீனமாக வாகனங்களை செலுத்துதல் உதாரணமாக கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அதிகமாக அவதானிக்க முடிகின்றது. இதனை போக்குவரத்து பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை. விபத்துக்களில் அதிகம் இளையோரே பலியாகின்றனர் என்பது மிகவும் துயரமானது.

விளம்பரம்
VLAMBARAM


33ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா.கு
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

### வேலையை ரசித்துச் செய்!

ஒரு தாயும் மகனும் மட்டும் வாழ்ந்த வீடு அது. ஏழைக்குடும்பம். வீட்டுத்தலைவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இப்போது தாய்க்கும் உடல் நிலை சரியில்லை. மரணத்தருவாயில் இருந்த தாயிடம் அம்மா நீயும் என்னைவிட்டுப் போய்விடாதே. நீயும் போய்விட்டால் நான் அனாதையாக ஆகிவிடுவேனே? என அவளது கையைப் பிடித்து அழுதான் அவளது பதினாறு வயது மகன்.



தாய் சொன்னாள், மகனே! எந்தச் சூழ்நிலையிலும் கலக்கம் கூடாது. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாவும் நாக சாகியும் எத்தனை அனாதைகளை உருவாக்கியது தெரியுமா? அவர்களெல்லாம் வாழாமல் போய்விட்டனரா? ஒன்றை மட்டும் புரிந்துகொள். உன் தந்தை அடிக்கடி என்னிடம் ஒரு விடயத்தை சொல்வார். அதையே உனக்கு சொல் கிறேன் என்ற தாயிடம் அந்தத் துயர மான சூழ்நிலையையும் மறந்து அவள் சொல்வதைக் கேட்க ஆர்வமானான் மகன்.

மகனே! நீ ஒரு கலைஞனாகி விடு. பிழைத்துக் கொள்வாய். அதற்காகப் பெரிய கலைஞன் ஆக வேண்டும் எனச் சொல்லவில்லை. உனக்குக் கழிவறை சுத்தம் செய்யும் பணி கிடைத்தால் கூட அதையும் பாக்கியமாகக் கருதி ரசித்து செய். நீ சுத்தம் செய்வதுபோல வேறு யாரும் அதை சுத்தம் செய்ய முடியாதபடி இருக்க வேண்டும். உன் வேலையில் ஒரு தனித்துவம் வெளிப்பட வேண்டும் என்றாள்.

ஆம், உங்கள் வேலையை ரசித்து செய்யுங்கள். ரசித்து செய்யும் வேலையில் தான் சுகமும் திருப்தியும் இருக்கிறது.

# நிலாவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மேற்பரப்பின் தன்மை குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ளும். எளிமையாகச் சொல்ல வேண்டுமெனில், ரோவர் நிலாவின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தரைப்பரப்பின் தன்மை என்ன, வெப்பம் எந்த அளவுக்கு உள்ளது, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தகவல்களைச் சேகரித்து அனுப்பும்.

இயல்பாகவே ஒரு பொருளை உடைத்தால்தான் அதற்குள் என்ன இருக்கிறது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடியும். அதேபோல் ரோவர் மண்ணைக் குடைந்து அதிலிருந்து மாதிரிகளை எடுத்து, அதை லேசர் மூலம் உடைத்துப் பார்க்கிறது.
நிலாவில் கால் பதித்துள்ள சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் அடுத்த 14 நாட்களுக்கு ஆய்வு மேற்கொள்ளும். நிலாவின் மின்னூட்டம், நிலநடுக்கம், அங்குள்ள சூழல் உள்ளிட்டவை பற்றி எல்லாம் ஆய்வை மேற்கொள்ள உள்ளது. நிலாவின் தரைப்பகுதியில் தொட்ட ரோவர் கருவி, நிலாவில் குறிப்பிட்ட தூரத்துக்கு ஊர்ந்து சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. ஆய்வின் போது எடுக்கும் படங்களையும் உடனுக்கு உடன் இஸ்ரோவுக்கு அனுப்பும்.

இப்படியாக பிரக்யான் ரோவர் முன்னோக்கி நகர்ந்துகொண்டே ஆய்வுகளைச் செய்யும்போது, அதன் ஆறு சக்கரங்களும் நிலாவின் தரைப்பரப்பில் இந்தியாவின் மூவர்ணக் கொடி மற்றும் இஸ்ரோவின் லோகோவை நிலவின் மேற்பரப்பில் பதிய வைக்கும்.

இவ்வளவு கஷ்டப்படு, விண்ணுக்கு அனுப்பிய விண்கலம் ஏன் வெறும் 14 நாள் தான் ஆய்வு செய்ய வேண்டுமா? கூடுதல் நாட்கள் ஆய்வு மேற்கொள்ள முடியாதா என்ற கேள்வி எழுவது இயல்புதான். நாம் வசிக்கும் பூமியில் ஒரு நாள் என்பது 12 மணி நேரம் பகல், 12 மணி நேரம் இரவு என்பதை குறிக்கிறது. ஆனால், நிலாவில் அப்படி இல்லை. நிலாவில் ஒரு நாள் என்பது பூமியின் 28 நாட்களைக் குறிக்கும். எளிதாக சொல்வது என்றால் நிலாவில் தொடர்ந்து 14 நாட்கள் பகல், அடுத்த 14 நாட்கள் இரவாக இருக்கும். இதனால், அங்கு ஒருநாள் என்பது பூமியின் 28 நாட்களுக்குச் சமமாகப் பார்க்கப்படுகிறது.

இதை மனதில் வைத்துதான் பகல் தொடங்கும் நாளில் லேண்டரை நிலவில், தரையிறக்க இந்திய.விஞ்ஞானிகள் தீவிரம் காட்டினர். திட்டமிப்படி இதை சாதித்தும் விட்டார்கள். அடுத்த 14 நாட்கள் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி கொண்டு லேண்டர் கருவி செயல்பட இருக்கிறது. ரோவர் கருவியும் இடைவிடாமல் தனது ஆய்வுப் பணியை செய்யும். நிலாவின் மேற்பரப்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஆய்வுகளும் நிலாவில் பகல் பொழுதான 14 நாட்களுக்குள் முடித்து விடும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அதன்பிறகு நிலாவில் இரவு தொடங்கிவிடும். தொடர்ந்து 14 நாட்கள் இருளாகவே இருக்கும் என்பதால் லேண்டர் கருவிக்கு சூரிய ஒளி


சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர்

கிடைக்காது.

இரவு நேரத்தில் அங்கு மைனஸ் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்கும் வெப்பநிலை குறையும். அந்த உறைபனிக் குளிரில் லேண்டர், ரோவர் இரண்டுமே இயங்க முடியாது. அவை இயங்கு வதற்குத் தேவையான சூரிய ஒளி அடுத்த இரண்டு வாரங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமின்றி, இரவு நீடிக்கும் அந்த இரண்டு வாரங்களிலும் நிலவும் உறைபனிக் குளிர் அவற்றின் பாகங்களில் விரிசல்கள் விழச் செய்யலாம். இதனால் அவை விரைவிலேயே இறந்துவிடும்.

உறைபனிக் குளிரில் இந்தக் கருவிகளால் இயங்க முடியாது என்பதையும் தாண்டி, அவற்றின் கட்டமைப்பிலேயே சேதங்கள் ஏற்படக்கூடும். உலோகங்களால் உறை பனிக் குளிர் வெப்பநிலையைத் தாங்க முடியாது.

அதிலும் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்கும் செல்லும்போது, அத்தகைய வெப்பநிலையில் அவை சேதமடையக் கூடும். இதனால், லேண்டர், ரோவரின் பாகங்கள் செயலிழக்க வாய்ப்புள்ளது.

இதனால்தான் மொத்த ஆய்வும் 14 நாட்களுக்குள் முடிவடையும் வகையில் அமைக்கப்பட இருக்கிறது. ஆக, அடுத்த இரண்டு வாரங்களில் ரோவரும் லேண்டரும் அனுப்பவுள்ள தரவுகள்தான் உலகளவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தை ஒரு புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றன.


விண்கலத்தை தங்க நிற மென் தகடுகள் சுற்றியிருப்பதை காண முடியும். அவை தங்கம் போல் காட்சியளித்தாலும் அது தங்கம் அல்ல. அதற்குப் பெயர் Multi-Layer Insulation. இந்த MLI என்பது மென் தகடுகளால் ஆனது. அந்த மென் தகடுகள் பல அடுக்குகளில் ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். தங்க நிற மென் தகடுகள் வெளியேயும், வெள்ளை அல்லது வெள்ளி நிற தகடுகள் உள்ளேயும் வைக்கப்படும். அவை பாலிஸ்டர் தன்மை கொண்ட பொருட் களால் ஆனவை. இதன் மீது அலுமினியம் பூச்சு இருக்கும். இவை இரண்டும் சேர்த்து தான் மென் தகடுகள் உருவாக்கப்படுகின்றன. இந்த தகடுகளின் வேலை, விண்கலத்தை கதிர்வீச்சிலிருந் தும் வெப்பத்திலிருந்தும் விண்கலத்தைப் பாதுகாப்பதாகும்,

அதுடன் விண்கலத்தின் கருவிகளில் உள்ள உணரிகள், விண்வெளி துகள் களால் சேதமடையக் கூடும். விண்கலம் காட்சிகளை பதிவு செய்வதை அந்த துகள்கள் தடுக்கக் கூடும். இந்த மென் தகடுகள், துகள்களிலிருந்தும் விண் கலத்துக்கு பாதுகாப்பு அளிக்கும்.

விக்ரம் லேண்டரை வெற்றிகரமாக நிலாவின் தென்துருவத்தில் தரையிறக்கி யதன் மூலம் இந்தியா 3 வகையான சாதனைகளை படைத்துள்ளது.

நிலவில் இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் கால்பதித்து இருந்தன. இந்தியா சந்திரயான் 3 திட்டம் மூலம் விக்ரம் லேண்டர் நிலாவின் தென்துருவத்தில் தரையிறங்கியதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு அடுத்த படியாக இந்தியாவும் நிலாவில் கால் பதித்து இருப்பது ஒரு சாதனையாகும். இதன் மூலமாக நிலாவில் விண்கலத்தை அனுப்பிய 4 வது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்று இருக்கிறது

இன்னொரு சாதனை என்னவென்றால் நிலாவில் கால்பதித்துள்ள அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் தென்துருவத்தின் பக்கம் திரும்பி கூட பார்க்கவில்லை. ஏனென்றால் இது மிகவும் ஆபத்தான பகுதி. இத்தகைய சூழலில் தான் இந்தியா ரிஸ்க் எடுத்து நிலாவின் தென்துருவத்தில் விக்ரம் லேண்டரை


சந்திரயான்-3 விண்கலத்தின் பிரக்யான் ரோவர்

தரையிறக்கி மகத்தான வெற்றியை பெற்றுள்ளது. இதன்மூலம் நிலாவின் தென்துருவத்தில் கால்பதித்த முதல் நாடு இந்தியா என்ற பெருமையை இஸ்ரோ விஞ்ஞானிகள் இந்தியாவுக்கு தேடிக் கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இஸ்ரோ, சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் நிலாவில் தரையிறங்குவதை நேரலையாக ஒளிபரப்பியது. இஸ்ரோவின் இணையதளம் மற்றும் யூடியூப் பக்கம், பேஸ்புக்கிலும் நேரலை செய்யப்பட்டது. இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் மட்டும் இன்றி உலகம் முழுவதும் பலர் இஸ்ரோ நிகழ்த்திய சாதனையை நேரலையில் கண்டு மகிழ்ந்தார்கள். நிலாவின் தென் துருவத்தில் இஸ்ரோ சாதனை நிகழ்த்தியிருக்கிறது என்றால், சமூக வலைத்தள பக்கத்திலும் இஸ்ரோ சாதனை வைத்துள்ளது.

அதாவது யூடியூப் பக்கத்தில் நேரலை ஒளிபரப்பை 8.06 மில்லியன் பேர்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


## இலவு காத்த கிளி!

கோடிக்கனவுகளுடன் திருமணம்
எதிர்பார்ப்புகளோ அதிகமில்லை!
ஆசைக்கணவரின் மனதில்
எனக்கான தனியிடம்!
தொழிலுக்கு முதலிடம் என்றார்!
தன்குடும்பத்திற்கு தனியிடம் என்றார்!
குழந்தைகளுக்கே முன்னுரிமை என்றார்!
எல்லாக்கடமைகளும் முடிந்தது
இனியாவது எனக்கெனமட்டும் என்றேன்!



இல்லை எனக்குத்தான்
என்றழைத்துச்சென்றது மரணம்!!


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville

Contact: 647.340.9490 / 416.732.2228

# நாமும் நமது இல்லமும் 638

# House Flipping



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அண்மைக்காலமாக 'House Flipping' என்ற சொல் ஆதன வியாபாரத்தில் மிகவும் பிரசித்தியடைந்து வருவதனை கனடியர்கள் அறிவார்கள். பொதுவாக House Flipping என்பது, ஓர் ஆதனத்தைக் கொள்வனவு செய்த பின்பு குறிப்பிட்ட கால இடைவெளியில் இதனை விற்று ஆதாயம் பெறுவதனையே குறிக்கும்.

ஏறும் ஆதனச் சந்தையில் இது இலகுவாக நிகழ்வதனை ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் பகுதிகளில் காணக் கூடியதாக உள்ளது.

பொதுவாக ஆதனத்தை வாங்குபவர்கள் மக்களின் இரசனைக்கு ஏற்ப சில திருத்த வேலைகளை குறைந்த செலவில் செய்து திரும்ப ஆதனச் சந்தையில் விற்று ஆதாயம் பெறுவதனைக் காணக்கூடிய தாக உள்ளது. இவ்வாறான செயல் ஆதன முதலீட்டாளர்களிற்கு சிறந்த வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதனை அனுபவத்தில் காணக்கூடியதாக உள்ளது. எனினும், இதில் பலவிதமான சவால்களை முதலீட்டாளர்கள் எதிர்பார்க்க வேண்டி உள்ளதனையும் கனடியர்கள் அறிய வேண்டும். அத்துடன் அதில் ஏற்படும் ஆதாயத்திற்கு அரசிற்குரிய வருமான வரியும் செலுத்த வேண்டியுள்ளது.

இதில் உள்ள சவால்களைக் கவனமாக ஆராயாவிட்டால் இந்த வகையான வியாபாரம் நட்டத்தில் முடியும் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். பொதுவாக Flipping நோக்கத்திற்காகக் கொள்வனவு செய்பவர், சந்தை விலையைவிடக் குறைவாக வாங்க வேண்டும். குறிப்பிட்ட குறைந்த காலத்தில் திருத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து சந்தைப்படுத்தல் வேண்டும். இதனைச் செய்வதற்குப் போதியளவு ஆரம்ப முதலீடு, செலவழிக்கக் கூடிய நேரம் மற்றும் சிறப்பான முன்னேற்பாடுகள் செய்தல் வேண்டும். அடமானம், திருத்த வேலைகளிற்கு மேலதிக பணத்திற்காக தகுந்த இடத்தில் பணம் பெறுதல் வேண்டும். பெறப்படும் கடனிற்குக் குறைந்தளவு வட்டி வீதம் செலுத்த வேண்டும். எனினும், எதிர்பாராத சவால்கள் ஏற்படின் அதனை தகுந்த முறையில் கையாளக்கூடிய ஆலோசகர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். அண்மையில் குடனிமைபெஇனால் ஏற்படும் ஆதன வருமானத்தில் அரசு தனக்கும் ஒரு பகுதியைப் பெறுவதில் மிகவும் கவனமாக உள்ளது.

ஆதனத்தை விற்ற பின்னர் பெறும் ஆதாயம் மூலதன ஆதாயம் (Capital Gain) என அழைக்கப்படும். மேலதிக



மாகப் பெறும் ஆதாயத்திற்கு அரச வரி செலுத்த வேண்டும்.

வாங்கி விற்கும் ஆதனம் ஒரு வருடத்திற்குக் குறைவாக அல்லது ஒரு வருடத்திற்கு அதிகமாக இருந்தால், அதற்கேற்ப வருமானவரி மாறுபடும். இவ்வாறு அடிக்கடி வாங்கி விற்றால் இதனையும் ஒரு வியாபாரமாக அரசு கணிக்கும். அவ்வாறான நிலையில் வியாபார வருமான வரி செலுத்தல் வேண்டும். Flipping பிரசித்தி பெற்று வருவதால் அரசு இதற்கு எதிராக புதிய சட்டங்களை இயற்றியுள்ளது. சிலர் இவ்வாறான ஆதனங்களை தமது முதன்மை இருப்பிடமாக (Principal Home) அரசிற்குச் சொல்லி வருகின்றார்கள். முதன்மை இருப்பிடத்திற்குக் கிடைக்கும் எதுவித இலாப வரியும் இதுவரை கனடாவில் செலுத்த தேவை இல்லை. இதனால் முதன்மை இருப்பிடம் என்பது ஒருவர் குறைந்தது ஒரு வருடமாக அங்கு வாழ்ந்து இருக்க வேண்டும் என்று சட்டமாற்றம் செய்துள்ளது.

எதிர்காலச் சட்டங்கள் Flipping Property மீதான புதுவிதமான ஆதாய வரிகள் கொண்டு வரப்படலாம். உண்மையான நியாயங்கள் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்திற்குள் விற்பனை செய்தாலும் செலுத்தப்படும் ஆதன வரியில் இலகுத்தன்மை காட்டப்படும். இவ்வாறான நியாயங்கள் நம்பிக்கைக்குரியதாக இருத்தல் வேண்டும்.


இதுவரை அநேகர் Flipping Housesகளில் ஆதாயம் பெற்றே வருகின்றனர். ரொறொன்ரோ, வன்கூவர் உலகில் வாழ சிறப்பு இடமாக இருப்பதால் தொடர்ச்சியாக மக்கள் வந்து கொண்டே இருப்பார்கள். இந்த வியாபாரமும் தொடரலாம்.



# நிலாவின்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

பார்த்துள்ளதாக "The world Ranking" தனது எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில் கூறியுள்ளது. இதுதான் இதுவரையில் அதிக வியூஸ்களை பெற்ற நேரலை ஒளிபரப்பு என்றும் அந்த பதிவில் கூறப்பட்டுள்ளது. இந்த வரிசையில் இரண்டாவது இடத்தில் பிரேசிலுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே நடைபெற்ற கால்பந்தாட்டம் இடம் பிடித்துள்ளது. இந்த போட்டியை யுடியூப்



நேரலையில் 6.15 மில்லியன் பேர் பார்த்துள்ளனர். தி வேர்ல்டு ரேங்கிங் தரவுகளின் படி இஸ்ரோ நிலாவில் மட்டும் இன்றி யூடியூப்பிலும் சாதனை நிகழ்த்தியிருக்கிறது.

இதுவரை இஸ்ரோ கையாண்ட 3 சந்திரயான் திட்டங்களுக்கும் தமிழர்களே இயக்குநர்களாக பணியாற்றி இருக்கின்றனர்.

மயில்சாமி அண்ணாதுரை சந்திரயான் 1 விண்கல திட்டத்தின் இயக்குநராக இருந்தவர். கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த இவர் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். வனிதா முத்தையா சந்திரயான் 2 விண்கல திட்டத்தின் இயக்குநராக இருந்தவர். சென்னையை சேர்ந்த இவர் தற்போது அண்ணா பல்கலைக்கழகமாக இருக்கும் அப்போதைய கிண்டி பொறியியல் கல்லூரியில் கல்வி பயின்றவர்.

வீரமுத்துவேல் தற்போது வெற்றிகரமாக நிலாவைத் தொட்ட சந்திரயான் 3 விண்கல திட்டத்தின் இயக்குநர். விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த இவர் சென்னை இந்திய தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி பயின்றவர்.

BRICS உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென்னாப்பிரிக்கா சென்று இருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரலை ஒளிபரப்பு வாயிலாக சந்திரயான் 3 விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்குவதை பார்த்தார். சந்திரயான் 3 திட்டம் வெற்றிபெற்றதாக அறிவித்த உடன் தனது கையில் இருந்த இந்திய தேசியக் கொடியை அசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதன் பின்னர் இஸ்ரோ விஞ்ஞானிகள் மத்தியில் உரையாற்றிய அவர், "இந்தியா வரலாறு படைத்து உள்ளது. நிலாவில் இந்தியா கால் பதித்துவிட்டது. உலகம் முழுவதும் இந்தியாவின் வெற்றி எதிரொலிக்கும். சந்தியரான் 3 திட்டம் வெற்றிபெற்றது என்பது 140 கோடி இந்திய மக்கள் பெற்ற வெற்றியாகும். புதிய இந்தியா உருவாகி உள்ளது.

நிலாவில் இந்தியாவின் காலடி பதிக்கப்பட்டு இருப்பது ஒட்டுமொத்த இந்தியாவை உற்சாகம் அடைய வைத்திருக்கிறது. இந்தியாவின் ஒவ்வொருவருடைய வீடுகளிலும் இதனால் உற்சாகம் பொங்கிக் கொண்டு இருக்கிறது. சரித்திர சாதனையை படைத்த இஸ்ரோ விஞ்ஞானிகளை பாராட்டுகிறேன். நிலாவின் தென் துருவத்தை சந்திரயான் 3 அடைந்ததன் மூலமாக யாருமே பெறாத வெற்றியை இந்தியா பெற்று உள்ளது. இந்த வெற்றிக்காக உழைத்த இஸ்ரோ விஞ்ஞானிகளை கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிலா.. நிலா.. ஓடிவா என்ற பாடலை இஸ்ரோ விஞ்ஞானிகள் உண்மையாக்கி இருக்கிறார்கள். சந்திரயான் 3 திட்டத்தின் வெற்றி என்பது ஒட்டுமொத்த மனித குலத்திற்கே கிடைத்த வெற்றியாகும். நமது அடுத்த இலக்கு என்பது நிலாவுக்கு மனிதனை அனுப்புவதாகும். இஸ்ரோ மாபெரும் சாதனையை தற்போது படைத்து இருக்கிறது. சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல் 1 என்ற விண்கலத்தையும் விரைவில் அனுப்ப உள்ளோம்." என்று தெரிவித்தார்.

பிரிட்டன் ஊடகங்களான தி கார்டியன் மற்றும் பிபிசி, அமெரிக்க ஊடகங்களான தி நியூயார்க் டைம்ஸ், தி வாஷிங்டன் போஸ்ட் மற்றும் சிஎன்என் வெளியிட்டுள்ள செய்திகளில்



"நிலாவின் தென் துருவத்தில் விண்கலத்தை நிறுத்திய உலகின் முதல் நாடாக இந்தியா அமைந்துள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல்: Oneindia மற்றும் BBC




INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

Property Management
Unit #210 - 80 Corporate Dr. Scarborough, ON, M1H 3G5

**WE ARE HIRING Admin Job**

Scarboroughவில் உள்ள Property Management Companyக்கு பெண் காரியதரிசி தேவை. solving & good communication skills in English & அத்தோடு தமிழ் பேசவும் தெரிந்திருத்தல்

- Previous Admin & Telemarketing experience
- Drivers License
- Fixed office hours plus few after hours job
- Willingness to learn and works as a team
- Suitable job for Ladies

**Available for Rent**

Markham - Bayview/Steeles - Bsmt - (1Brm + 1Bath) [$1,750/m]
Oshawa - Simcoe /Conlin-Detached-(4+2Brm + 4Bath) [$3,450/m]
Bowmanville -HWY2/Trulls Rd-Detached-(3+2Brm +2Bath) [$3,400/m]
Courtice - Old Varcoe/Centrefield Dr - Bsmt (1Brm + 1Bath) [$1,500/m]
Toronto - Yonge/Finch Ave - Condo - (2Brm + 1Bath) [$3,100/m]
Pickering - Liverpool/Finch Ave - Detached (3Brm + 2Bath) [$3,200/m]

**Rental Guarantee**

வாடகைக்கு இருப்பவர்கள் வாடகை தாராவிடின் மாதா மாதம் உங்கள் வாடகை பணம் கிடைப்பதற்கான உத்தரவாதம் உண்டு. விபரங்களை அறிய எமக்கு ஈமெயில் செய்யவும். முகவரி: invest.karukandiah@gmail.com

**Seminar for Real Estate Investment**

Investment Property வாங்க இது நல்ல தருணமா?
எந்த இடத்தில், எப்படியான Property வாங்குவது நல்லது?
Investment Propertyக்கு Mortgage எடுப்பதில் சிரமம் உண்டா?
tax implications என்ன? Please register for seminar, invest.karukandiah@gmail.com

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# நானிலம் போற்றும் நட்பு – 28



- அகணி -
authorakani@gmail.com

*"கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை
வல்லார்க்கு நாளிழுக்கம் நட்டார் செயின்."*

(அதிகாரம் பழமை, குறள் 808) என்ற குறளிற்கு "பழகிய நண்பர் செய்த தவறு பற்றிப் பிறர் சொன்னாலும், கேளா மலிருக்கும் உரிமை வல்லவர்க்கு, அந்த நண்பர் தவறு செய்வாரானால் அது பயனுள்ள நாளாகும்." என்று உரையா சிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நண்பரின் குற்றத்தைப் பிறர் சொன்னா லும் நம்பாதவருக்கு, தம் நண்பர் குற்றம் செய்தால், அது அன்றைய சூழலின் குற்றமாகவே தோன்றும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பினரின் குற்றத்தைப் பொருட்படுத் தாதவர்க்கு, நட்பினர் பிழைசெய்யும் நாள் பயனுள்ள நாளாகும்."என்று உரையா சிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."
நண்பர்கள் செய்யும் குற்றத்தைப் பொருட்படுத்தாதவரின் நட்பின் தன்மை பற்றி இந்தக் குறளில் அறிவுரை கூறப்பட்டுள்ளது.


நட்பு பற்றிய பெறுமதியான விடயங்களை சங்க இலக்கியங்களில் காணலாம். குறுந்தொகை என்ற நூலில் உள்ள சில விடயங்களைக் கவனிப்போம்.

குறுகிய பாடல்களின் தொகுப்பு குறுந் தொகை. நான்கடி முதல் எட்டடி வரையில் உள்ள செய்யுட்களைத் தொகுத்துக் குறுந்தொகையென்று பெயர் வைத்தனர்.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்கள். இவைகளிலே ஆறு நூல்கள் அகப் பொருள் பற்றிக் கூறுகின்றன.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, பரி பாடல், கலித்தொகை என்னும் ஆறுமே அகப்பொருளைப் பற்றிக் கூறுவன் ஒரே பொருளைப் பற்றி உரைப்பன. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணை நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களே குறுந்தொகைப் பாடல்கள். இப்பாடல்கள் எல்லாம் தனித்தனித் திணையாக இல்லா மல் கலந்து கிடக்கின்றன. குறுந் தொகையிலே உள்ள பாடல்களைப் பாடியவர்கள் இருநூற்றைந்து புலவர்கள் என்று கூறப்படுகின்றது. குறுந்தொகை யைத் தொகுத்தவன் பூரிக்கோ என்று சொல்லப்படுகின்றது. இப்பாடல்களில் பல நீதிக்கருத்துகளையும் காணலாம்.

சாமி. சிதம்பரனார் அவர்கள் குறுந் தொகைப் பாடல்களிற் காணும் சங்ககால மக்களின் வாழ்க்கை, நீதிநெறி முறைகள், இயற்கைக் காட்சிகள் வாழ்க்கை நலன்கள், நட்பின் சிறப்பு முதலிய பல சிறப்புகளை "குறுந்தொகைப் பெருஞ் செல்வம்" என்ற நூலில் மக்கள் அனை வருக்கும் புரியும் நடையில் அறிமுகப் படுத்தியுள்ளார்கள். இந்த நூலின் துணைகொண்டு குறுந்தொகையில் வரும் நட்பு பற்றிய விடயங்களை ஆராய்வோம். குறுந்தொகையில் வரும் மூன்றாவது பாடலைக் கவனிப்போம்.




இது தேவ குலத்தார் என்னும் புலவர் பாட்டு. குறிஞ்சித் திணை, தலைமகளின் உயர்ந்த தன்மையை, நட்பின் சிறப்பைக் கூறுகிறது.

தலைவனும் தலைவியும் களவு மணவாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின் றனர். நீண்ட நாட்களாக அவர்கள் இவ்வாறு வாழ்ந்து வருகின்றனர். தலைவியின் தோழிக்கு மட்டும் இந்த உண்மை தெரியும். அவள் தலைவனைப் பார்க்கும் போதெல்லாம் ஊரார் அறியத் தலைவியை மணந்து கொண்டு கற்பு மண வாழ்க்கையில் ஈடுபடும்படி கூறுகின்றாள். தலைவியும் கற்பு மணத்தில் வாழவே விரும்புகிறாள்.

தலைவனோ விரைவில் கற்பு மணம் புரிந்து கொள்கின்றேன் என்று சொல்லிச் சொல்லிக் காலம் கடத்திக் கொண்டே வருகின்றான். ஆயினும் அடிக்கடி தலைவனும் தலைவியும் இரவிலும், பகலிலும் கொல்லைப்புறத்திலும், வேறிடங் களிலும் சந்தித்துக் கூடி மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

ஒரு நாள் தலைவன், தன் காதலியாகிய தலைவியைக் காணும் பொருட்டு வந்தான். அவள் இருக்கும் இல்லத்தின் கொல்லைப் புறத்திற்கு வந்தான். வேலிக்குப் புறத்திலே அவள் வரவை எதிர்பார்த்து நின்றான். வேலிக்கு வெளியிலே தலைவன் வந்து நிற்பதைத் தோழி அறிந்தாள். அவன் அவளை இன்னும் மணந்து கொள்ளாமல் இவ்வாறு காலம் கடத்துவது சரியல்ல என்பது தோழியின் எண்ணம். இதனைத் தலைவன் அறிய வேண்டும் என்பது தோழியின் விருப்பம். தோழி தன் கருத்தைத் தலைவன் அறியும்படியாக அவன் காதிலே கேட்குமாறு தலைவியிடம் கூறினாள்.

"தலைவியே நமது தலைவன் மானங் கெட்டவன் வெட்க மில்லாதவன் சொல்லிய சொல்லை நிறைவேற்றாதவன். உன்னை மணந்து மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்து வேன் என்று உறுதிமொழி கூறி உன்னைக் கைப்பிடித்தான். அவன் சொல்லிய சூளுரையை இன்னும் நிறை வேற்றவில்லை. காலம் கடத்திக் கொண்டே வருகின்றான். அவனுடைய நட்பு நீடிக்கு மென்று நாம் எப்படி நம்புவது?" என்று தலைவனைப் பழித்துரைத்தாள் தோழி. சிறைப்புறத்திலே- வேலிக்கு வெளியிலே நின்று கொண்டிருந்த தலைவன் செவியிலே இச்சொற்கள் நுழைந்தன.

தலைவிக்குத் தோழியின் சொற்கள் வேப்பங்காயாக இருந்தன. காதலனைப் பழிப் ணுபதை அவளால் பொறுக்க முடியவில்லை. "தலைவனுடைய நட்பு மிகவும் சிறப்புடையது. அவனை வீணாகப் பழிக்காதே" என்று சொல்லித் தோழியின் சொற்களைத் தடுத்தாள் இதுவும் சிறைப்புறத்திலே நின்ற தலைவன் காதிலே விழுந்தது அப்பொழுதே இனிக் காலம் தாழ்த்தக் கூடாது விரைவில் மணந்து கொள்ள வேண்டும் எல்லாருங் காண இல்லறம் நடத்த வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான் தலைவன் இந்த நிகழ்ச்சியை விளக்குவதே இப்பாடல்.

இப்பொழுது இந்தப் பாடலின் பொருளைக் கவனிப்போம்.
"எனது காதலன் மலை நாட்டுத் தலைவன் அவனுடைய மலைச் சாரலிலே குறிஞ்சி மரங்கள் நன்றாகக் கிளைவிட்டு வளர்ந்திருக்கின்றன. அவை பூத்துக் குலுங்கியிருக்கின்றன் வண்டுகள் அம்மலர்களிலிருந்து தேனை மிகுதியாக ஈட்டுகின்றன. இத்தகைய இனிய தேன் வழியும் மலை நாட்டுக்குத் தலைவன். இனிய பண்புகளை உடையவனாகத்தான் இருப்பான் அவனிடத்திலே வெறுக்கும் குணங்களைக் காண முடியாது. இதை உணராமல் நீ என்னென்னவோ உளறுகின்றாய். அவனுடன் நான் கொண்டிருக்கும் நட்பின் சிறப்பை நீ அறியவில்லை. என் ஆருயிர்த் தோழியாயிருந்தும் இதை அறியா மலிப்பதற்காக வருந்துகின்றேன், அந்த நட்பின் பெருமையைச் சொல்கிறேன் கேள்.

*நிலத்தினும் பெரிதே!
"வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவு
இன்றே் சாரல்
கருங்கோல் குறிஞ்சிப்
பூக்கொண்டு
பெரும்தேன் இழைக்கும்
நாடனொடு நட்பே."*

அவனிடம் நான் கொண்டிருக்கும் நட்பு இந்த நிலத்தைக் காட்டிலும் பெரிய பரப்புள்ளது. வானத்தைக் காட்டிலும் உயர மானது கடலைக் காட்டிலும் அளக்க முடியாத அருமையான ஆழமுள்ளது. ஆதலால் அவனைப் பழித்துரைக்காதே.
அகலமுள்ளது நிலம். உயரமுள்ளது வானம் ஆழமுள்ளது கடல் இவற்றைவிட அகலத்திலும், உயரத்திலும், ஆழத்திலும் மிகுந்தது ஒன்றும் இல்லை. ஆதலால் அன்பின் தூய நட்பின் பரப்பு, உயரம் ஆழங்களுக்கு இவை எடுத்துக் காட்டப்பட்டன.
தலைவி தலைவன் மீது கொண்ட நட்பின் பெருமையை இந்தப் பாடல் எடுத்துக் கூறினாலும் இந்தக் கதையில் தோழியானவள் எவ்வளவு அக்கறையோடு தலைவியின் துயரத்தை நீக்கப் பாடுபடுகிறாள் என்பதும் தோழியின் நட்பின் மேன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. ஒரே பாடல் மூலம் தோழி என்ற உறவிலும் காதலர் என்ற உறவிலும் உள்ள நட்பின் சிறப்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் ஆராய்வோம்.
நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

## கல்வி இன்று கடைத்தெருவில்

கல்விக்கூடங்களை சில
கயமைக் குணத்தினர்
கலவிக்கூடங்களாகியது அவலம்
பள்ளி அறைகள் சில
பண்பற்ற மாக்களால்
பள்ளியறை ஆனதொரு அவலம்
அரும்பெரும் கல்வியாளர்கள்
ஆளுமையை நீக்கி அங்கு
அரசியலார் புகுந்ததொரு அவலம்.

கள்ளுண்டு போதையோடு
பள்ளிக்குள் வந்து ஆசிரியர்
பாடம்நடத்திடும் ஓர் அவலம்
பள்ளிக் கட்டணமென்று
கொள்ளையடிக்கும் கூட்டம்
பள்ளிகள் நடத்துகின்ற அவலம்.

மதிப்பெண்ணே குறியென்று
மாணவரை மழுங்கடிக்கும்
மதிகெட்ட கூட்டமொரு அவலம்
அத்தனையும் தெரிந்திருந்தும்
அக்கிரமம் களையாமல்
அரசாங்கம் இருக்குமொரு அவலம்
கடைநிலையில் உள்ளவரையும்
கடைத்தேற்றும் கல்வி இன்று
கடைத்தெருவில் நிற்பது பெரும் அவலம்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

*Brand New Condo Project*

# THE GRAND

## AT UNIVERSAL CITY

*Starting Low $ 600K*



1 Bed Room to 3 Bed Room

- ⌘ Flexible deposit structure
- ⌘ #5000 Upon Signing
- ⌘ 2.5% Extended Deposit
- ⌘ Occupancy : November 2027
- ⌘ 1 Year Free maintenance fee.
- ⌘ 5 Appliances included
- ⌘ No Assignment Fee
- ⌘ Rental Possible during Occupancy
- ⌘ Development Charges capped.

**Please Call : Raja Mahendran 416-315-9397**

HOMELIFE

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

# சூப்பர் ஸ்டார் சர்ச்சையும் ரஜினியின் குடிப் பழக்கமும்!

## பத்திரிகையாளர் ஷங்கர் நேர்காணல்

நேர்கண்டவர்: கண்ணன்

‘ஜெயிலர்’ திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரஜினி சொன்ன காகம் _ கழுகு குட்டிக்கதை, ‘ஜெயிலர்’ வியாபார வெற்றி போன்றவற்றால் ‘யார் சூப்பர் ஸ்டார்’ என்ற சர்ச்சை மீண்டும் தமிழ் திரையுலகில் சூடுபிடித்திருக்கிறது. இது தொடர்பாக, ரஜினிக்கு நெருக்க மானவரும் மூத்த சினிமா பத்திரிகை யாளருமான ஷங்கர் அளித்த பேட்டி;

‘ஜெயிலர்’ இசை வெளியீட்டு விழாவில் ரஜினி சொன்ன குட்டிக்கதை தொடர்பாக பலரும் பல்வேறு கருத்துகளை சொல்லி வருகிறார்கள். நீங்கள் நீண்ட காலமாக அவரை நெருக்கமாக பின்தொடர்ந்து வருபவர் என்பதன் அடிப்படையில் கேட்கிறோம்; ‘குரைக்காத நாயும் இல்லை. குறை சொல்லாத வாயும் இல்லை. நாம் நம்முடைய வேலைய பார்த்து போய்க் கொண்டே இருக்க வேண்டும்’ என்று அந்த விழாவில் ரஜினி பேசியுள்ளார். இதில், குறை சொல்லாத வாய் என்று அவர் யாரை குறிப்பிடுகிறார்? தமிழ் திரையுலகில் ரஜினி அனைவரையும்விட உயரமான இடத்தில் இருக்கிறார். யாருடனும் போட்டி போட வேண்டிய அவசியத்தில் அவர் இல்லை. இப்போது அவரது எண்ணமெல்லாம் இந்த திரையுலகில் கடைசி வரை தொடர்ந்து இருப்பது மட்டும்தான். அந்தளவுக்கு திரையுலகம் அவருக்கு உயிர். அரசியல் எல்லாம் அப்புறம்தான். இந்நிலையில், ‘நான் தான் சூப்பர் ஸ்டார்’, ‘நான் தான் நம்பர் 1’ என அவரை சீண்டுவது மாதிரி வரும் சர்ச்சைகள் அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதைத்தான் அவர் அந்த மேடையில் வெளிப்படுத்துகிறார்.

தொடர்ந்து அந்த விழாவில் ரஜினி ஒரு குட்டிக்கதையும் சொல்லியுள்ளார். “காட்டில் சிறிய மிருகங்கள் எப்போதும் பெரிய மிருகங்களை தொல்லை செய்து கொண்டே இருக்கும். உதாரணத்துக்கு சிறிய காகம் எப்போதும் பெரிய கழுகை சீண்டிக் கொண்டே இருக்கும். ஆனால், கழுகு எப்போதுமே அமைதியாகவே இருக்கும். பறக்கும் பொழுது கழுகைப் பார்த்து காகம் உயரமாக பறக்க நினைக்கும். ஆனாலும் காகத்தால் அது முடியாது. ஆனால், கழுகு தன் இறக்கையை கூட ஆட்டாமல் எட்ட முடியாத உயரத்தில் பறந்துகொண்டே இருக்கும்” என்கிறார். இந்தக் குட்டிக் கதையில் கழுகு யார், காகம் யார்? கழுகு _ ரஜினி, காகம் _ விஜய் என்று சிலர் சொல்கிறார்களே, அது சரியா? அது அப்படி சொல்கிறவர்கள் பார்வை. மற்றபடி விஜய் என்ற தனிப்பட்ட நபரை பற்றி பேச வேண்டிய அவசியம் ரஜினிக்கு இல்லை. ரஜினிக்கு சமமானவரும் இல்லை விஜய். ரஜினியின் ‘ஸ்டைல்’, ‘மேனரிசம்’, ‘பாணி’ பார்த்து காப்பியடித்து வளர்ந்தவர்தான் விஜய். ’நான் ரஜினி ரசிகன்’, ‘அண்ணாமலை தம்பி நான்’, ‘நான் தான் பாட்சா தம்பி’ என்றெல்லாம் வசனம் சொல்லி வந்தவர்தானே விஜய். அவருக்கென்று தனி ‘ஸ்டைல்’ உண்டா? ‘போக்கிரி’ வரைக்கும் ரஜினியை குறிப் பிடாத விஜய் படங்களே இல்லை. இன்று அரசியலுக்கு வருகிறேன் என்று அவர் பேசுவதுகூட ரஜினியை காப்பியடித்துதான்.

விஜய் இப்போது தளபதி என்று வைத்திருக்கிறாரே அதுகூட ரஜினியைப்



பார்த்துதான். முதலில் ரஜினியைத்தான் தளபதி என்று சொல்வார்கள். ‘தளபதி’ என்று அவர் ஒரு படமே செய்துள்ளார். தளபதி ரஜினி என்பதால், விஜய், இளைய தளபதி என வைத்துக்கொண்டார். இது தொடர்பான ஒரு கேள்விக்கு விஜய் அப்பா சந்திரசேகர் சொன்ன பதில், ‘தளபதி என்றால் ரஜினி. அவரது தம்பி என்பதால் விஜய் இளைய தளபதி’ என்பதுதான்.

இப்படிப்பட்ட ஒருவரைப் பார்த்து ரஜினி பொறாமைப்பட வேண்டிய அவசியமே இல்லை. இன்று ‘ஜெயிலர்’ வரைக்கும் 45 வருடங்களாக தொடர்ந்து வெற்றிகளை கொடுத்து வருபவர் ரஜினி. இதுபோல் ஒரு ரெக்கார்ட் விஜய்க்கு இருக்கிறதா? ‘மெர்சல்’ தொடங்கி ‘வாரிசு’ வரைக்கும் விஜய் படங்களின் வெற்றி எல்லாம் சர்ச்சைக்குறியதுதான். எதை வைத்து ‘நான் தான் நம்பர் 1’ என்று அவர் சொல்கிறார் எனத் தெரியவில்லை.

ஒருவேளை வியாபார ரீதியாக நாளை நம்பர் 1ஆக விஜய் ஆனாலும்கூட ‘சூப்பர் ஸ்டார்’ பட்டத்தை வைத்துக் கொள்ளக்கூடாது என்றுதான் சொல்வேன். தமிழ் திரையுலகில் நடிகர் திலகம் என்றால் சிவாஜிதான், புரட்சித் தலைவர் என்றால் எம்.ஜி.ஆர்.தான், அதுபோல் சூப்பர் ஸ்டார் என்றால் ரஜினிதான். விஜய் விருப்பப்பட்டால் ‘சினிமாவின் கிங்’ என்று வைத்துக்கொள்ளட்டும், யார் தடுக்கப் போகிறார்கள். அதைவிட்டுவிட்டு ‘சூப்பர் ஸ்டார்’ பட்டத்துக்கு அவர் ஆசைப்படுவது தர்மம் அல்ல் எக் காலத்திலும் ரஜினியும் அதை விட்டுக் கொடுக்கக்கூடாது என்றுதான் நான் சொல்வேன்.

அந்த விழாவில் தனது குடிப் பழக்கம் பற்றியும் மிக வெளிப்படையாக பேசியுள்ளார் ரஜினி. ரஜினியின் குடிப் பழக்கம் புதிய தகவல் அல்ல. அவரே ஏற்கெனவே நிறைய சொல்லியுள்ளார். இப்போது தன் அனுபவத்தில் இருந்து மற்றவர்களுக்கு ஒரு ஆலோசனையாக சொல்கிறார். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? ரஜினி எப்போதும் எதையும் மூடி மறைத்து வைத்தில்லை. தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, பொதுவாழ்க்கையிலும் சரி, பெரும்பாலான வற்றை வெளிப்படையாக பேசியுள்ளார். குறிப்பாக அவருடைய மதுப் பழக்கம், புகைப் பழக்கம் இரண்டையுமே தொடக் கத்தில் இருந்து அவர் மறைத்து வைத்துக்கொள்ளவில்லை. இப்போது அந்த குடிப்பழக்கத்தால என்னன்ன இழந்தேன்னு சொல்லி, தன் அனுபவத்தையே மற்றவர்களுக்கு ஒரு ஆலோசனையாகவும் சொல்லியிருக்கார். உண்மையிலேயே இது மிகப்பெரிய விஷயம்.

பொதுவாக மதுப் பிரியர்களிடம் ஒரு விஷயத்தை நீங்கள் பார்க்கலாம். குடிக்கு அடிமையானதால் செய்ய வேண்டிய காரியங்களை தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பார்கள். போதை காரணமாக, இப் போது வேண்டாம், அப்புறம் பார்த்துக் கலாம், அப்புறம் பார்த்துக்கலாம் என தள்ளிப் போடத்தான் தோன்றும். அரசியல் பிரவேசம் உட்பட பல காரியங்களை ரஜினியும் தள்ளிப் போட்டுள்ளார். அதற்கு தனது குடிப்பழக்கமும் ஒரு காரணம் என்பதை அவர் மறைமுகமாக சொல்லி உள்ளதாகத்தான் நான் பார்க்கிறேன்.

ரஜினியின் இந்த குடிப்பழக்கம் எப்போது தொடங்கியது?

பள்ளிக்கூட நாட்களிலேயே மோசமான நண்பர்கள் சகவாசத்தால் குடிக்கத் தொடங்கிவிட்டதாக ரஜினியே சொல்லி உள்ளார். புகைப் பழக்கமும் அப்போதே தொடங்கிவிட்டது. சென்னைக்கு வந்து நடிக்கத் தொடங்கிய பிறகும் இந்த பழக்கங்களை அவரால் விட முடிய வில்லை. இதில் சிகரெட்டை தனது ஸ்டைலாகவே மாற்றிவிட்டார்.

ரஜினியின் குடிப்பழக்கத்தால் படப் பிடிப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதா?

அவரது குருநாதர் கே. பாலசந்தர் இயக்கிய ‘அவர்கள்’ படப்பிடிப்பிலேயே குடித்து பாலசந்தரிடம் திட்டு வாங்கி யுள்ளார். அன்றிலிருந்து அதன்பின்னர் படப்பிடிப்பில் அவர் குடித்ததே இல்லை. அதேநேரம் அதற்கு முன்னரும் சரி பின்னர் இப்போது வரையும் சரி, குடிக்கு அடிமையாக இருந்தாலும், ரஜினியால் படப்பிடிப்பு நின்றதே இல்லை. 1978இல் ரஜினி 21 படங்கள் நடித்தார். ஒரு வருடத்தில் 21 படங்கள் என்பது எந்த நடிகரும் செய்யாதது. அப்போது அவர் குடியின் உச்சத்தில் இருந்தார். அப்போதும் சரி, அவரால் படப்பிடிப்புகள் தடைபட்டதே இல்லை.

இந்த குடிப்பழக்கத்தால் அவருக்கு உடல்நலப் பிரச்சினைகள் எதாவது வந்ததா?

அவருக்கு சிறுநீரகப் பிரச்சினை வந்த துக்கு காரணமே மதுவும் புகையும்தான். இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து மாற்று சிறுநீரகம் பொறுத்த வேண்டிய அளவுக்கு நிலமை மோசமானது. சிங்கப்பூர் போய் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துதான் மீண்டு வந்தார்.

மதுப்பிரியர்களில் நண்பர்களுடன் குடிப் பது, தனியாக குடிப்பது, வீட்டில் குடிப்பது, பார்ட்டிகளில் குடிப்பது என பல வகையினர் இருக்கிறார்கள். ரஜினி எப்படி?

சென்னையைப் பொறுத்தவரைக்கும் தனியாகத்தான் குடிக்க விரும்புவார். சோழா ஹோட்டலில் இதற்காகவே தனி அறை வைத்திருந்தார். பெங்களூரு போனால் அவரது நண்பர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவரது நண்பர் ஒருவரே ஒரு பெரிய பார் ஓனர்தான். ஆங்கே கூடுவார்கள். மும்பை போனாலும் நண்பர்களுடன் மது அருந்துவார்.

ரஜினிக்கு பிடித்த சரக்கு என்ன?

தொடக்கத்தில் சாராயம் குடித்துள்ளார். நடிக்க வந்த பின்னர் உள்ளூர் சரக்குகளை குடித்துள்ளார். ஓரளவு வருமான வரத் தொடங்கியதும் உள்ளூர் சரக்குகளை விட்டுவிட்டார். உயர்தர வெளிநாட்டு மதுவகைகள் குடிக்கத் தொடங்கினார். சென்னை கோடம்பாக்கம் சாலையில் உள்ள அருணாச்சலம் ஹோட்டலை வாங்கிய பின்னர் ஒரு நாள், அந்த ஹோட்டலின் மாடியில் நின்று சிகரெட் குடித்த போது, பழைய பிராண்டை விட்டுவிட்டு ட்ரிபிள் பை சிகரெட்டுக்கு மாறினாராம். மதுவிலும் அப்போது ஏயுவு 69 என்ற சரக்குக்கு மாறியுள்ளார். அதன்பின்னர் அவருக்கு பிடித்தமான சரக்கு ஊளையள சுநபயட, டீடயஉம டுயடிநட. பகல் நேரங்களில் பியர் விரும்பி குடிப்பதாகவும் சொல்லியுள்ளார்.

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MC.COWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Sep. laundry & parking. Avail.Sept. 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.268.1739**

**MORNINGSIDE & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Laundry & parking. Close to all facilities. Avail. immediately.
**416.724.1430/647.446.8590**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt with full washroom & kitchen. Close to all facilities. Avail. immediately.
**416.519.1862 /416.562.0949**

**MARKHAM & ELSON**
2 Bedroom- large size bsmt for rent. Sep. entrance , laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.6085**

**MARKHAM & ELLESEMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & sep. laundry. Avail. immediately.
Email: vasaganhappy@gmail.com
**416.723.3343/ 647.761.7294**

**KENNEDY & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
**416.904.9781 /905.943.9655**

**BELLAMY & ELLESMERE**
2 bedroom + den walk-out bsmt for rent. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.648.1673**

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Avail. immediately.
**416.671.7768/416.283.2738**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

## BASEMENT FOR RENT

**VARCOE & KING ST. (HWY 2) OSHAWA**
1 bedroom bsmt for rent. Students/couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.473.4717**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent. Working male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு :**647.533.0084**

**MARKHAM & STEELES (STAINES ROAD)**
Furnished room in bsmt for rent. Sep. entrance.Working male only (Wifi & all included )
தொடர்புகளுக்கு : **416.827.5565**

**WARDEN & SHEPPARD**
1 bedroom for rent in a 2 bedroom walk–out bsmt. Malayalam speeking girl preferred. Avail. October 01, 2023.
தொடர்புகளுக்கு : **416.268.8855**

**MORNINGSIDE & OLD FINCH**
2 rooms for rent in a walk-out bsmt. Ladies preferred. Close to all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.886.5889**

**MORNINGSIDE & STAINES**
2 Rooms for rent. Ladies preferred.Close to all amenities. Avail. immediately.
**416.848.9697/647. 888.9437**

**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent in a 2 bedroom bsmt. Shared kitchen & washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.455.6015**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a condo. Shared kitchen, laundry, internet & Sep.washroom. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.988.4508**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Male preferred. Close to all facilties. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.388.2948**

மேலும் பக்கங்கள்
14, 15, 16

## ROOM FOR RENT

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food. Couple / Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MARKHAM & STEELES**
1 Room for rent in upstairs. Utilities, cable & internet included. Single ladies preferred.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

**MORNINGSIDE & MCLEVIN**
1 bedroom for rent in a house. Parking & laundry. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**MCCOWAN & DENISON**
1 Room for rent in a 5 bedrooms house. பெண்கள் விரும்பத்தக்கது. 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**WARDEN & FINCH**
1 bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

## BASEMENT FOR RENT

9th LINE & 14th AVENUE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking and laundry. Close all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.7273**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, sep. laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.631.5745**

## BASEMENT FOR RENT

**NEILSON & HWY 401**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.726.6193**

## HOUSE FOR RENT

MORNINGSIDE & MCNICOLL
3 bedroom house for rent. Parking, laundry. Close to School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : 416.648.7078

**MARKHAM & DENISON**
4 Bedroom house for rent. 2.5 washrooms & parking. Close to School, shoping & all other facilities. Avail. immediately.
**Call Haran: 416.880.4829**

**SIMCOE & ADELAIDE (OSHAWA)**
3 Bedroom house for rent. Parking. Close to School, shoping & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.764.1649**

## BASEMENT FOR RENT

14th AVENUE & 9th LINE
Brand new 2 bedroom bsmt for rent in Box Grove Community. Large living room. Sep. entrance, parking & sep. laundry. No Smoke / no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.505.4522**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**
2 bedroom brand new bsmt for rent. City permitted. Sep.entrance, 2 full washrooms & internet. 10 mins. walk to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.201.6075**

## BASEMENT FOR RENT

**HWY 401 & WESTNEY (AJAX)**
Brand new 2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & sep. laundry. Close to all facilities. No No smoke. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.999.3878**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**
1 Room for rent in a 3 bedroom bsmt. couple/2 girls/2 boys preferred. Close to School & TTC, Grocery stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT FOR RENT

HWY 48 & STOUFFVILLE RD.

2 Bedroom brand new ravine walk-out bsmt for rent. Sep.entrance, laundry &parking.Close to stores, Service Ontario. Walking distance to South Asians & AKT tamil stores.

தொடர்புகளுக்கு : **416.844.4254**

## HOUSE FOR RENT

HWY 7 & 9TH LINE

3 bedroom 2 story house for rent. 2 washrooms & 2 parkings. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு : **416.560.4152**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**

2 Rooms for rent in a house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.

**647.540.4618 /416.305.4773**

## MEENA'S KITCHEN

உங்கள் சகலவிதமான வைபவங்களிற்கும் தேவையான உணவு வகைகளும் இலங்கை இந்திய முறைப்படி சுடச்சுடச் சமைத்து வழங்கப்படும். **Home made food small or big orders & Daily meals.** அழையுங்கள் **Meena's Kitchen.**

**647.561.4946**

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 master bedroom for rent. couples/family preferred. Few steps tothe TTC bus stop. Close to allfacilities. Avail. Sept. 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.302.0847**

## காணி விற்பனை

திருகோணமலை **Alas Garden** இல் ***Lyca /Kentower*** பக்கத்தில், நடக்கும் தூரத்தில் கடற்கரை, புல்மோட்டை சாலையுடனும் மின்சார, குழாய்கிணறு வசதி கொண்ட 20 பேர்ச் உறுதிக்காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு : **647-205-8317**

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 50 வயதான ஆண் ஒருவருக்கு தகுந்த பெண் துணையை கனடாவில் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:

**416.668.6606**

## JOB AVAILABLE

**Need a COOK immiediately** in community housing for elderly people in Thunder bay, Ontario. Must live in one unit. Need experience. The salary would be discussed.

**647.205.4615/647.471.3909**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC. (SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவை எதுவானாலும் அழையுங்கள்.

**Please call or text me : 416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**

உங்களது **rooms, house or basement,**ஐ சட்டரீதியாக **University / College Students ,**ற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**

**HomeLife Future Realty Inc. Brokerage**

## JOB AVAILABLE

EAST OF OSHAWA ? COBOURG, ONTARIO.

We are looking for full time & part time COOK for our Wimpys dinein Cobourg.

Long hours available.

Please contact: Bob

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான **(Graduated in Medical office administration)** பெண்ணுக்கு மணமாகாத 38 - 42 வயதுள்ள **Roman Catholic** மணமகனைத் தேடுகிறோம்.

**416.551.9737 / 647.937.1243**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & STAINES**

**Multiple bedrooms with washrooms for rent in upstairs. Students / working ladies preferred.**

தொடர்புகளுக்கு: **647.561.4946 / 647.856.4678**

## HOUSE & BASEMENT FOR RENT

**NEILSON & SHEPPARD**

3 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. Immediately.

**A HOUSE FOR RENT IN AJAX- ROSSLAND & CHURCH**

**4 Bedrooms, 3 washrooms & 3 car parking.**

தொடர்புகளுக்கு: **416.509.724**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

**Multiple bedrooms available with bathroom & kitchen.**

தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.

**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## HOUSE & BASEMENT FOR RENT

(1) **Ajax** Bsmt Available Salem & Taunton, 1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking. (2) Pickering House & Basement Available. Whites Road& Taunton 3 bedroom house & 2 washroom. 2 bedroom, 1washroom, sep. entrance, 2 car parking. (3) Markham Basement - 2 bed room, 1washroom, Kitchen sep. entrance. தொடர்புகளுக்கு: **647. 282.5782**

## JOBS AVAILABLE

**Need a female caregiver to take care of 65 year old woman in OSHAWA. Includes assist with giving medications, cooking & cleaning Looking for coverage from 10AM to 4PM. Monday to Friday.**

வயோதிப பெண் ஒருவருக்கு உணவு தயாரித்தல், துப்பரவாக்கல் போன்ற பராமரிப்புத் தேவைகளுக்காக பெண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை. பராமரிப்பாளர் வருகை தரவேண்டிய நாட்கள் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை. முற்பகல் 10:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணிவரை. **Please call: 647.998.5403**

## JOBS AVAILABLE

**HIRING FULL TIME & PART TIME COOKS for a Canadian take-out Restaurant in Down Town, Toronto.**

Full time / part time positions available.7 days a week, 11 am to 12am. Minimum 2 years experience required.

அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

**Nishan: 647.226.7742**

# சென்ற வாரம் உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த மூன்று முக்கிய நிகழ்வுகள்.

குரு அரவிந்தன்

வெளிவந்த விளையாட்டுத்துறை சார்ந்த இரண்டு நிகழ்வுகளும், விண்வெளி சார்ந்ததொரு நிகழ்வும் பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது. ஒன்று இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் நடந்த உலகக் கிண்ணத்திற்கான பெண்கள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி, மற்றது பதினெட்டே வயதான பிரக்ஞானந்தாவின் உலகக் கிண்ணத்திற்கான சதுரங்க ஆட்டப் போட்டி, மூன்றாவது சந்திரனின் தென்துருவத்தில் தரையிறங்கும் போட்டி. இந்த மூன்று நிகழ்வுகளும் விளையாட்டுத்துறை மற்றும் விண் வெளித்துறையில் ஆர்வம் உள்ளவர்களை மட்டுமல்ல, ஏனைய பொதுமக்களின் கவனத்தையும் பெரிதாக ஈர்த்திருந்தன.

பெண்கள் உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்பெயின் அணியினர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றாலும், அவர்களின் இந்த வெற்றிக்குப் பின்னால் ஒரு சோகக்கதை இருந்தது. சிட்னியில் நடந்த இறுதிப் போட்டியில் இங்கிலாந்தும் ஸ்பெயினும் மோதிக் கொண்டன. ஸ்பெயின் அணியின் தலைவியான 23 வயதான ஓல்கா காரமோனா ஒரு கோலைப் போட்டு ஸ்பெயினுக்கு வெற்றியைத் தேடித்தந்திருந்தார். ஸ்பெயின் வெற்றியைக் கொண்டாடிய போது, இந்த வெற்றிக்குக் காரணமாக யார் அந்தக் கோலை அடித்து வெற்றியை ஸ்பெயின் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தாரோ, அவரிடம் ஒரு சோகச் செய்தி பகிரப்பட்டது, அது என்ன வென்றால் அவரது தந்தையார் திடீர் மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்பதேயாகும்.

போட்டி ஆரம்பிப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்னதாகவே ஒல்காவின்



தந்தை மரணமாகியிருந்தார். இந்தச் செய்தி ஓல்காவைப் பாதிக்கும் என்பதால், தந்தை மரணமடைந்த செய்தியை உடனடியாக அவருக்கு அறிவிக்கவில்லை. ஸ்பெயினின் அணித்தலைவி என்ற வகையில் வெற்றிக் கிண்ணத்தை அவர் பெற்ற பின்புதான் அந்தத் துயரசம்பவம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நிலைப்பாடு இருந்ததாலும், விளையாட்டு அணியினரின் நான்கு வருடக் கடின உழைப்பின் பிரதிபலனை எதிர்பார்த்து அவர்கள் இருந்ததாலும் இந்த விடயம் வேண்டுமென்றே தாமதித்துத் தெரிவிக்கப் பட்டது. துயரச் செய்தியை வேண்டு மென்றே தாமதித்ததால்தான் ஒரு நன்மை கிடைத்தது, அதாவது அதனால்தான் இன்று ஸ்பெயின் அந்த உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை பெருமையுடன் ஏந்தி நிற்கிறது.

மற்ற விளையாட்டுத்துறைச் செய்தி சதுரங்கம் பற்றியது. இந்தியாவைச் சேர்ந்த 18 வயதான பிரக்ஞானந்தாவின் தனிப்பட்ட திறமை சார்ந்தது.

அசர்பைஜானில் நடைபெற்ற உலகக் கிண்ணச் சதுரங்கப் போட்டியில் அரை யிறுதிச் சுற்றுக்கான போட்டியில் அமெரிக்கரான பாபியானோ கருணாவை எதிர் கொண்ட போது, இருவரும் சமநிலையில் இருந்தனர். அதனால் சமநிலை தவிர்ப்புக்கான போட்டி இருவருக்குமிடையே நடைபெற்றது. இதில் பிரக்ஞானந்தா வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குத் தெரிவானார். வயதில் குறைந்த ஒருவர் சதுரங்க இறுதிச் சுற்றுக்குத் தெரிவானது இதுவே முதற்தடவையாகும்.

இறுதிச் சுற்றில் நோர்வே நாட்டைச் சேர்ந்த மேக்னஸ் காரல்சென் என்ப வருடன் போட்டியிட்டார். மேக்னஸ் காரல்சென் ஐந்து முறை உலக சாம்பிய னாக வந்தவர். முதலாவது ஆட்டம் வெற்றி தோல்வி இன்றிச் சமநிலையில் முடிவுற்றது. இரண்டாவது ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவுற்றதால், வெற்றி தோல்வியைக் கணிப்பதற்காக நேரக்கட்டுப்பாட்டோடு அதிரடியாகச் சமநிலை தவிர்ப்பு விளையாட்டாக மாற்றப்பட்டது. இதில் அனுபவம் மிக்க மேக்னஸ் காரல்சென் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றார். 18 வயதான பிரக்ஞானந்தாவின் வெற்றிக்கு எதிர்காலம் நிச்சயம் காத்திருக்கும்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் விளை யாட்டுத் துறை சார்ந்ததாக இருக்க மூன்றாவது போட்டி விண்வெளித்துறை சார்ந்ததாக இருந்தது. நிலவின் தென் துருவத்தில் முதலில் யார் பாதுகாப்பாகத் தமது தரையிறங்கியை இறக்குவது என்ற போட்டி ரஸ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்தது. இந்தியாவுக்கு முன்பாகத் தான் தென்துருவத்தில் இறங்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை யோடு அவசரமாக ரஸ்யா அனுப்பிய லூனா _ 25 சந்திரனின் தென்துருவத்தில் இறங்கும்போது, தரையில் மோதி உடைந்து விட்டது. ஆனால் இந்தியா திட்டமிட்டபடி நிதானமாக தனது சந்திராயன்-3 தரையிறங்கியான விக்ரத்தை 23-8-2023 அன்று வெற்றிகரமாகத் தரையிறக்கி இருந்தது.

இது இந்தியாவின் மிகப்பெரியதொரு சாதனையாகும். சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கும் போட்டியில் இஸ்ரேல், யப்பான், இந்தியாவின் சந்திராயன்-2, ரஸ்யாவின் லூனா-25 ஆகியன சமீப காலங்களில் முயற்சி செய்தாலும் பலன் கிடைக்காமல் தோல்வியில் முடிந்தன. தோல்விகள்தான் வெற்றியின் ஏணிப்படிகள் என்பதால், அந்த அனுபவத்தால், முதன்முதலாக இந்தியாவின் சந்திராயன் - 3 சந்திரனின் தென்துருவத்தில் வெற்றிகரமாகத் தரை யிறங்கிச் சாதனை படைத்திருக்கின்றது.

---

# அமைதிக்கான முகவரி

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877.707 3221 Toll free
416 431 5000 தமிழ்
www.wopg.org www.tprf.org

## The Address to Peace

மக்களிடம் ஏற்கனவே உள்ள ஒன்றைப் பற்றி அவர்களிடம் கூறத் தேவையில்லை என பிரேம் ராவத் கூறுகிறார். எனினும் மிக நுட்பமாக அதைத்தான் அவர் செய்கிறார். பல தசாப்தங்களாக அவர் உலகெங்கும் பிரயாணம் செய்து, ஒவ்வொரு மனிதருக்கும் உள்ளே உள்ள தனிநபர் அமைதி மற்றும் நிறைவு பற்றி உரையாற்றி வருகிறார்.

"நான் எதைச் செய்கிறேனோ அதை நான் செய்யவேண்டியதில்லை என்னும் எண்ணக் கருத்தில் உள்ளேன்" என அவர் கூறு கிறார். நான் எல்லா இடங்களுக்கும் சென்று ஆனந்தத்தைப் பற்றிக் கதைத் திருக்கத் தேவையில்லை. நான் எவருடனும் அமைதியைப் பற்றிக் கதைக்கத் தேவையில்லை. நிறைவுடன் இருப்பதைப் பற்றி நான் எவருடனும் கதைக்கத் தேவையில்லை. அந்த மிகவும் அடிப்படையான விடயங்களை நாம் மறந்துவிட்டோம் என்பதும், யாரோ ஒருவர் வந்து எம் ஒவ்வொருவரிடமும் நாம் நிறைவடைய வேண்டும் என்பதை ஞாபகப் படுத்துவதும் மிகவும் வேதனைக்குரியதென நான் எண்ணுகிறேன்.

எமக்கே நாம் செவிசாய்க்கா விட்டால் நாம் எவ்விதம் இன்னுமொருவர் கூறுவதைக் கேட்கப் போகிறோம் என திரு. பிரேம் ராவத் கேட்கிறார். சோக்கிரட்டீஸ் எதைக் கூறினார்? "உன்னையே நீ அறிவாய்" என அவர் கூறினார். அவரேதான் நாம் எல்லாவற்றையும் கேள்வி கேட்டு ஆராய வேண்டும் என்றும் கூறினார். ஒருவர் எவ்வளவு கேள்விகளைக் கேட்கிறாரோ அந்த அளவிற்கு நன்றாக இருக்கும் என அவர் கூறினார். எனினும் அவர் அடிக்கடி ஞாபகப்படுத்திய அந்தக் கூற்று ஒரு கேள்வி அல்ல. "உன்னையே நீ அறி வாய்" அது ஒரு கேள்விபோலத் தோன்ற வில்லை. அப்படித் தோன்றுகிறதா? அது ஒரு பதிலாகத்தான் தோன்றுகிறது. இறுதி யில் எங்களுக்கு கேள்வி ஒன்று தேவைப் படாத பதில் ஒன்று கிடைக்கலாம்.

"போதிப்பதற்காக நான் இங்கு வர வில்லை". யாரோ ஒருவருடைய பிரச்சினை களுக்குத் தீர்வு இருப்பதாகக் கூறுவதற் கும் நான் இங்கு வரவில்லை. நான் அதற்காக வரவில்லை. எனினும் எனக்கு எம்முள்ளே ஓர் இடத்தில் விளக்கொன்று இருப்பது பற்றித் தெரியும். அத்துடன் அது எரிந்துகொண்டே இருக்கிறது. எப்பொழுது இருள் ஏற்படுகிறதோ அப்போது நாம் ஒரு சூரியனை உருவாக்க முயற்சிக்கத் தேவை யில்லை. ஒரு சிறிய விளக்கு அந்த வேலையைச் செய்யும்.



ஒருவனோ அல்லது ஒருத்தியோ தமது வாழ்க்கையில் எதைச் செய்யவேண்டும் என எண்ணுகின்றனரோ உண்மையிலேயே அது அவர்களைப் பொறுத்தது. நான் கூறுவதைக் கேட்பவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால்: தயவுசெய்து உங்கள் உள்ளே உள்ள விளக்கை எவ்விதம் ஒளிரச் செய்வது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதுதான். நீங்கள் அறிந்துவைத்திருக்கும் சகல விடயங்களுடனும் உங்களைப் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அதைப் பற்றித்தான் நான் உரையாடுகிறேன். நீங்கள் அதைச் செய்தால் அப்போது நீங்கள் அமைதியைக் காண்பீர்கள். அதுதான் அந்த அமைதிக்கான முகவரி.

இது என் வாழ்வில் நடந்தது அல்லது அது என் வாழ்வில் நடந்தது என மக்கள் கூறுவர். எப்பொழுது எமது வாழ்வில் நாம் கவனத்தைக் குவிக்காமல் மற்ற எல்லா விடயங்களிலும் கவனத்தைச் செலுத்து கிறோம் என்றால் எமது உயிர்வாழ்வில் நாம் ஓர் உடைந்த கப்பலில் கட்டப் பட்டிருக்கிறோம் என்பதால்தான். அது ஞானமா? இல்லை. அது ஒரு பொது அறிவு. நடந்து கொண்டிருக்கும் அந்த விடயங்கள் வேதனை தருவதாக இருக்கலாம் என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன். ஆனால் அந்த வேதனையிலும் கூட அங்கே ஓர் உண்மை யுள்ளது. அந்த உண்மை எப்படியென்றால் ஆழ்ந்த இருளில் எரிந்து கொண்டிருக்கும் மெழுகுதிரியைப் போன்றது. மிகவும் வேதனைக்குரிய துக்கத்திலும் வேதனைகளிலும் - நாம் இருள் என வரைவிலக் கணப்படுத்தும் எவ்விதமான இருளாகவும் இருக்கலாம். நமக்குள்ளே அழகான மெழுகுதிரி ஒன்று எரிந்து கொண்டிருக் கிறது. அந்த வேளையில் கூட நாம் கைவிடப்படவில்லை.

"உங்கள் வாழ்வில் நல்ல காலம், கஷ்டகாலம், சரியானநேரம்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

# கும்மியில் ஒரு குமுறல்

காப்பு

அருட்கவி யென்று அழகுபேர் சூட்டி
பெருவிழாவில் பாடவைத்த பெம்மான் - திருவருளே
கென்னடி வீதிக் களிறே வரசித்யா
உன்புகழ் பாடினேன் பணிந்து!

மரபு மரபென மாபெரும் கொண்டாட்டம்
மக்களோ இப்போது மாறிவிட்டார்
கறுவலோ வெள்ளையோ கண்ட இனமெல்லாம்
கட்டி யலைகிறார் கண்டதுண்டோ?

ஈழத்தில் வாழ்கையில் எங்கள் தமிழினம்
எத்தனை கட்டுடன் வாழ்ந்ததப்பா
மாழ்கிறா ரிம்மண்ணில் மற்றவன் போலவே
வாழத் துடித்துத்தாம் மாறுவதால்

கோலத்தை மாற்றினார் கொள்ளையும் மாற்றினார்
கொண்டை அழகையும் மாற்றிவிட்டார்
சேலையும் மாற்றுறார் செந்தமிழ் கொல்கின்றார்
சொல்லிட உள்ளம் சுருங்குதையா

கருங்குழல் பெண்ணிலே கண்ட அழகெலாம்
காண்பரோ எம்மினக் காளையர்கள்?
அரும்பெரும் பண்பாடு அத்தனை பாளாகும்
ஆபத்தும் கண்முன்னே தோற்றுதப்பா!

மூத்தோரைக் கும்பிட்டு வாழ்த்துக்கள் பெற்றநாள்
முற்றுமே இப்போது போனதையா
ஆத்தாக் கொடுமையில் அப்பாமார் அம்மாமார்
ஆழ்கின்றார் மூத்தோரின் இல்லங்களில்

சொந்தக் கணவனின் சொல்லேதும் கேளாமல்
சுந்தரி சுற்றுதல் கண்டதுண்டோ
பந்தம் அறுந்தவர் பாதியில் வாழ்வின்றி
பாதையில் சுற்றுதல் கேட்டதுண்டோ?

எத்தனை சீர்கேடு எம்மவர் காண்கின்றார்
இத்தரை நோய்களில் எம்மவரே!
பத்தினிச் சொல்போச்சு பண்பாடும் போச்சுது
பார்த்திட உள்ளம் பதறுதையா!



எங்கள் வயதினர் இந்தமண்ணை விட்டு
எமலோகம் சென்றது மென்னாகுமோ
பொங்கு தமிழினம் போல ஒருஇனம்
போற்றியே வாழ்ந்ததும் போயிடுமோ?

பிள்ளைக்கு எந்தமிழ் போற்றிப் புகட்டாது
பித்தராய் வாழ்கிறார் எம்தமிழர்
தெளளு தமிழினைத் தேறி உணராதார்
சொல்லு வரோதாம் தமிழரென்று

ஆணொடு பெண்களும் ஆட்சேப மின்றியே
அலைகிறார் ராத்திரி வேளையிலே
காண அசிங்கமே கட்டிளங் காளைகள்
கன்னியர் கூடவே சுற்றுகிறார்

தந்தையர் தாயரின் சம்மத மின்றியே
தாமே இணைகிறார் சல்லாபத்தில்
முந்தும் கருவினை மூத்தோர் அறியாது
முற்றும் கரைப்பதைக் கேட்டதுண்டோ?

சந்ததி காணாத சங்கதி பற்பல
சரித்திர மாகுது இம்மண்ணிலே
வெந்தவெம் சொந்தங்கள் வேகுது நோயினால்
வீற்றிடுவார் சிலர் பைத்தியமாய்!

மாடியால் பாய்வதும் மக்களின் தொல்லையால்
மற்றும் மனநோயும் மக்களினால்?
வாடி வதங்கிடும் வண்தமி ழெம்மினம்
மாயாது காப்பீரோ கற்றவரே?


- அருட்கவி த.ஞானகணேசன் -

## அமைதி...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

பிழையானநேரம் எது நடந்தாலும் நான் உங்களுக்கு விதந்துரைப்பதெல்லாம் தெளிவில் ஆர்வ மாக இருங்கள் என்பதுதான். தெளிவில் தாகமாக இருங்கள், ஆனந்தத்தில் தாகமாக இருங்கள். உள்ளே உள்ள இந்த அழகில் ஆர்வம் கொள்ளுங்கள். இந்தப் பரிசில் ஆர்வமாக இருங்கள். இந்தப் பரிசை இனங்கண்டு கொள்வதில் ஆர்வமாக இருங்கள். நிறைவடைய வேண்டும் என்பதில் ஆர்வமாக இருங்கள். உள்ளே ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் அந்த ஒளியில் இருப்பதற்கு ஆர்வமாக இருங்கள். இந்த உலகில் உள்ள இருளுக்காக நாம் பயப்படத் தேவை யில்லை. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளே ஒரு விளக்கைக் காவிக் கொண்டிருக்கிறோம். அதுதான் அறிந்து கொள்வதென்னும் ஒளி வாழ்வு. ஒரு பரிசு என்பதை அறிந்துகொள்ளுதல். நாம் உயிருடன் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்தல். நாம் பாக்கியசாலிகள் என்பதை அறிந்துகொள்ளுதல். அது எம் எல்லோரிடமும் உள்ளது. அவ்வளவுதான். அது அந்தளவிற்கு எளிமையானது. எங்களுக்கு எப்பொழுதும் தேவைப்படும் தெளிவு, எமக்குத் தேவைப்படும் எல்லா ஆனந்தத்தையும் எம்முள்ளே எப்பொழுதும் காவிக்கொண்டிருக்கிறோம்.

தாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர் என்று மக்கள் என்னிடம் கூறும்போது நான் அவர்களிடம் அவர்கள் எதைத் தேடுகின்றனர் என்று கேட்பதுண்டு. அவர்கள் அமைதியைத் தேடுவதாக, ஆனந்தத்தைத் தேடுவதாகக் கூறுவர். அது கருத்தில்லாத ஒன்று. ஏனெனில் அந்தக் குணாம்சங்கள் எல்லாம் எம் உள்ளே உள்ளது. தேடவேண்டிய அவசியம் இல்லை. உங்களால் உங்கள் சொந்த முகத்தை எவ்விதம் தேடமுடியும்?



நீங்கள் மலையில் ஏறுவீர்களா? நீங்கள் தவம் இருப்பீர்களா? இல்லை. அது ஏற்கனவே அங்குள்ளது. உங்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் முகம்பார்க்கும் கண்ணாடி ஒன்று தான். முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது நீங்கள் எதைப் பார்ப்பீர்கள்? உங்கள் முகத்தைத் தான் நீங்கள் பார்ப்பீர்கள். நான் எதை வழங்குகிறேன்? உள்ளே என்ன உள்ளது என்பதைக் காண்பதற்கான ஒரு கண்ணாடி. இதுதான் எம்மை நாம் அறிந்து கொள்வதற்கான வழி.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## எது கெடும்

- தனலக்சுமி -

01) பாராத பயிரும் கெடும்.
02) பாசத்தினால் பிள்ளை கெடும்.
03) கேளாத கடனும் கெடும்.
04) கேட்கும்போது உறவு கெடும்.
05) தேடாத செல்வம் கெடும்.
06) தெகிட்டினால் விருந்து கெடும்.
07) ஓதாத கல்வி கெடும்.
08) ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09) சேராத உறவும் கெடும்.
10) சிற்றின்பன் பெயரும் கெடும்.
11) நாடாத நட்பும் கெடும்.
12) நயமில்லா சொல்லும் கெடும்.
13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15) பிரிவால் இன்பம் கெடும்.
16) பணத்தால் அமைதி கெடும்.
17) சினமிகுந்தால் அறமும் கெடும்.
18) சிந்திக்காத செயலும் கெடும்.
19) சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20) சுயமில்லா வேலை கெடும்.
21) மோகித்தால் முறைமை கெடும்.
22) முறையற்ற உறவும் கெடும்.
23) அச்சத்தால் வீரம் கெடும்.
24) அறியாமையால் முடிவு கெடும்.
25) உழுவாத நிலமும் கெடும்.
26) உழைக்காத உடலும் கெடும்.
27) இறைக்காத கிணறும் கெடும்.
28) இயற்கையழிக்கும் நாடும் கெடும்.
29) இல்லாள் இல்லா வம்சம் கெடும்.
30) இரக்கமில்லா மனிதம் கெடும்.
31) தோகையினால் துறவு கெடும்.
32) துணையில்லா வாழ்வு கெடும்.
33) ஓய்வில்லா முதுமை கெடும்.
34) ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35) அளவில்லா ஆசை கெடும்.
36) அச்சப்படும் கோழை கெடும்.
37) இலக்கில்லா பயணம் கெடும்.
38) இச்சையினால் உள்ளம் கெடும்.
39) உண்மையில்லா காதல் கெடும்.
40) உணர்வில்லாத இனமும் கெடும்.
41) செல்வம்போனால் சிறப்பு கெடும்.
42) சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43) தூண்டாத திரியும் கெடும்.
44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45) காய்க்காத மரமும் கெடும்.
46) காடழிந்தால் மழையும் கெடும்.
47) குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48) குற்றம்பார்த்தால் சுற்றம் கெடும்.
49) வசிக்காத வீடும் கெடும்.
50) வறுமைவந்தால் எல்லாம் கெடும்.
51) குளிக்காத மேனி கெடும்.
52) குளிர்ந்துபோனால் உணவு கெடும்.
53) பொய்யான அழகும் கெடும்.
54) பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55) துடிப்பில்லா இளமை கெடும்.
56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57) தூங்காத இரவு கெடும்.
58) தூங்கினால் பகலும் கெடும்.
59) கவனமில்லா செயலும் கெடும்.
60) கருத்தில்லா எழுத்தும் கெடும்.